Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு ௨023 ஐப்பசி 09 (25 - 10 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை ௨50

## அகதிகள் நிவாரணமாக பழுதடைந்த சௌபி

யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படும் உலர் உணவு நிவாரண விநியோகத்தில் பழுதடைந்த சௌபியும் ஓர் முக்கிய உணவுப் பொருளாக விநியோகிக்கப்பட்டுவருகிறது. தொடர்ந்தும் இவ்வாறான பழுதடைந்த உணவுப் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருவதால் இடம் பெயர்ந்த அகதிகள் தொடர்ந்தும் பாதிப்படையும் நிலை உருவாகிஉள்ளது. அண்மையில் கொழும்பில்இருந்து பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''குமண'' என்ற கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களில் ஒரு பகுதி பழுதடைந்துபோய் உள்ளது [6 ஆம் பக்கம் பார்க்க]

# வவுனியாவில்மின்வேக அதிரடி

# 8 படையினர் பலி: பலர் காயம்

## 10 காவலரண்கள் தகர்ப்பு
## கண்ணியில் சிக்கிய பவல் நாசம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடுவிற்கும் மடுக்கந்தைக்கும் இடையில் அமைந்திருந்த தொடர் காவரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மின்வேக அதிரடியில் எட்டுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயங்களுடன் ஓடிவிட்டனர். இத்தாக்குதலின் போது பத்துக் காவரண்கள் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன. பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேலும், இத்தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு மடுக்கந்தை இராணுவ முகாமில் இருந்து வந்த 'பவல்' கவசவாகனம் ஒன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி முற்றாக நாசமடைந்தது. இதே வேளை இத்தாக்குதலில் இரு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் இவ் அதிரடித் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு பத்து நிமிட நேரம் மட்டுமே நீடித்தது. இத்தாக்குதலில் 10 தொடர் காவலரண்கள் கைப்பற்றப்பட்டுமுற்றாக அழிக்கப்பட்டன.

இத்தாக்குதலின் போது எட்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் அருகிலுள்ள காவலரண்களுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

இதேவேளை இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது மடுக்கந்தை இராணுவ முகாமிலிருந்து''பவல்'' கவச வாகனம் சகிதம் உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது கண்ணிவெடி தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் 'பவல்' கவச வாகனம் சேதமடைந்தது.

இத்தாக்குதலில் இரு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

வவுனியா மாமடுவ தொடர்காவலரண்கள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர்அதிரடித்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம்வருமாறு

| | | |
|---|---|---|
| ★ ரி 56-2 ரக துப்பாக்கி | — | 03 |
| ★ ரி 56-1 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரி 81-1 ரக துப்பாக்கி | — | 03 |
| ★ ரி 56 மகசின் | — | 26 |
| ★ சிறிய ஜே ஆர், கைக்குண்டு | — | 06 |
| ★ கறுப்பு ஜேர் ஆர் கைக்குண்டு | — | 02 |
| ★ நடுத்தரரவைகள் | — | 1962 |
| ★ தொலைத்தொடர்புசாதனம் | — | 01 |
| ★ வோக்கி ரொட் | — | 01 |
| ★ தொப்பி | — | 02 |
| ★ கிட்பாக் | — | 10 |
| ★ இராணுவப்பட்டி | — | 05 |

## புல்மோட்டையில் 11 படையினர் பலியாகினர்

[கொழும்பு]

புல்மோட்டைப் பகுதியில் பலியான சிறிலங்கா இராணுவத்தினரின் எண்ணிக்கை பதினொன்று என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[06ஆம் பக்கம் பார்க்க]

## தீபாவளி வாழ்த்துகள்

''ஈழநாதம்'' பத்திரிகையின் வாசக நெஞ்சங்களுக்கும், அபிமானிகளுக்கும் எமது உளப்பூர்வமான தீபத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தமிழ் அகதிகள் மீது முஸ்லிம்கள் தாக்கு

(கொழும்பு)

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் இருக்கும் விவேகானந்தா சபை மண்டபத்தில் இயங்கி வரும் தமிழ் அகதிகள் முகாம் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கம்பிகள் மற்றும் பொல்லுகள் சகிதம் சுமார் நூற்றியப்பதுக்கும் மேற்பட்ட சிங்கள, முஸ்லிம் காடையர்கள் சூழ்ந்து தாக்குதல் நடத்தினர் எனவும், மேலும் தெரியவருகிறது

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவின் கவனத்திற்கு அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கொண்டுவந்ததாகத் தெரியவருகிறது.

## பயணிகள் செல்லும் பாதையில் வெடிகுண்டு வைக்க சதி

### அரசின் நாசகார திட்டம் அம்பலம்

எமது விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக அடக்க முற்பட்டுப் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் சிறிலங்கா அரசு தனது தோல்வியை மறைக்க எமது மக்கள் மீது நாசகார அழிவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டு வருகின்றது என விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச்செய்திக் குறிப்பில் அதன் ஒரு பகுதியாக வவுனியா இராணுவத்தினர் எமது மக்களை இலக்கு வைத்து வெடிகுண்டுத் தாக்குதல்களை நிகழ்த்த மேற்கொண்ட நடவடிக்கை அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது.

ஓமந்தையைச்சேர்ந்த சிவனு கந்தசாமி, பல்லவராயன கட்டைச்சேர்ந்த நவரத்தினம் இராசமணி (பெண்) ஆகிய இருவரும் வழமையான வியாபாரத்திற்கென வவுனியா சென்று வரும் பொதுமக்களாவர்.

வவுனியாவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இவர்களைத் தமது நாசத் திட்டத்திற்குப் பயன்படுத்த எண்ணித் தொடர்பு கொண்டனர். இராணுவத்தினரின் நயவஞ்சகத் திட்டத்தினை உணர்ந்து கொண்ட இவர்கள் சாதுரியமாக இராணுவத்தினருடன் பழகி அவர்களது திட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளனர்.

எமது மக்களும் போராளிகளும் பிரயாணம் செய்யும் ஓமந்தை சேமமடு வீதியில் புதைப்பதற்கென ஒரு தொகுதி வெடி மருந்தும் பிறபொருள்களும் இராணு

[06 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாற்றில் புலிகள் தாக்கு
## பல காவலரண்கள் அழிப்பு

### படையினருக்கு பலத்த சேதம்

(மணலாறு)

மணலாற்றில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள்

அழிக்கப்பட்டன. இராணுவத் லைப் புலிகள் தாக்குதலை இராணுவ முகாமிலிருந்து

சிக்கி முற்றாக நாசமடைந்தது. இதே வேளை இத்தாக்குதலில் இரு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் இவ் அதிரடித் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு பத்து நிமிட நேரம் மட்டுமே நீடித்தது. இத்தாக்குதலில் 10 தொடர் காவலரண்கள் கைப்பற்றப்பட்டுமுற்றாக அழிக்கப்பட்டன.

இத்தாக்குதலின் போது எட்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் அருகிலுள்ள காவலரண்களுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

இதேவேளை இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது மடுக்கந்தை இராணுவ முகாமிலிருந்து ''பவல்'' கவச வாகனம் சகிதம் உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது கண்ணிவெடி தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் 'பவல்' கவச வாகனம் சேதமடைந்தது.

இத்தாக்குதலில் இரு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## தீபாவளி வாழ்த்துகள்

''ஈழநாதம்'' பத்திரிகையின் வாசக நெஞ்சங்களுக்கும், அபிமானிகளுக்கும் எமது உளப்பூர்வமான தீபத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீது நாசகார அழிவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டு வருகின்றது என விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச்செய்திக் குறிப்பில் அதன் ஒரு பகுதியாக வவுனியா இராணுவத்தினர் எமது ... கந்தசாமி, பல்லவராயன கட்டைச்சேர்ந்த நவரத்தினம் இராசமணி (பெண்) ஆகிய இருவரும் வழமையான வியாபாரத்திற்கென வவுனியா சென்று வரும் பொதுமக்களாவர்.

வவுனியாவில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் இவர்களைத் தமது ... ணுவத்தினருடன் பழகி அவர்களது திட்டத்தை அம்பலப் படுத்தியுள்ளனர்.

எமது மக்களும் போராளிகளும் பிரயாணம் செய்யும் ஓமந்தை சேமமடு வீதியில் புதைப்பதற்கென ஒரு தொகுதி வெடி மருந்தும் பிறபொருள்களும் இராணு

[06 ஆம் பக்கம் பார்க்க]

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

வவுனியா மாமடுவ தொடர்காவலரண்கள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர்அதிரடித்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்வருமாறு

★ ரி 56-2 ரக துப்பாக்கி — 03
★ ரி 56-1 ரக துப்பாக்கி — 02
★ ரி 81-1 ரக துப்பாக்கி — 03
★ ரி 56 மகசின் — 26
★ ரி 81 மகசின் — 09
★ ஜே ஆர். கைக்குண்டு — 02
★ சிறிய ஜே ஆர், கைக்குண்டு — 06
★ கறுப்பு ஜேர் ஆர் கைக்குண்டு — 02
★ நடுத்தரரவைகள் — 1962
★ தொலைத்தொடர்புசாதனம் — 01
★ வோக்கி றொட் — 01
★ தொப்பி — 02
★ கிட்பாக் — 10
★ இராணுவப்பட்டி — 05
★ சப்பாத்து (சோடி) — 04
★ பரா லைட் — 06

# மணலாற்றில் புலிகள் தாக்கு பல காவலரண்கள் அழிப்பு

## படையினருக்கு பலத்த சேதம்

(மணலாறு)

மணலாற்றில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் இராணுவத்தினரின் பல காவலரண்கள் புலிகளால் அழிக்கப்பட்டன. இராணுவத்தினருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. வெடிப் பொருள்களும், இராணுவ உபகரணங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மண்கிண்டி இராணுவ முகாமிற்கு அண்மையில் அமைத்திருந்த சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர், அதிகாலை 5-50க்கு ஆரம்பித்த இத்தாக்குதல் 30 நிமிட நேரம் இடம் பெற்றது. இத்தாக்குதலின் போது பல இராணுவ காவலரண்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன.

இதேநேரம் மண்கிண்டி இராணுவ முகாமிலிருந்து சிங்களக் குடியிருப்பு இரா

[06 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவத்திடம் கைப்பற்றியவை

மணலாறு மாவட்டத்திலுள்ள மண்கிண்டி இராணுவ முகாம் அருகில் அமைந்திருந்த சிறிலங்கா காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டபொருள்களின் விபரம் வருமாறு:

★ நடுத்தர ரவைகள் - 847
★ ஜே. ஆர். ரக கைக்குண்டு - 04
★ தலைக்கவசம் - 05
★ ஏ. கே. மகசின் - 06
★ ஏ. கே. ேஹால்சர் - 01
★ புளட் புருவ் ஜக்கட் கோல்சர் - 02
★ ரெயின் கோட் - 01
★ சப்பாத்து (சோடி) - 02

## இறந்த மிருகங்களை கிணற்றில்போடும் படையினர்


(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் தங்கியிருக்கும் பொதுமக்கள் தற்போது நரகதின் பிடியில் இருப்பது போன்ற ஓர் அவல நிலையில் இருப்பதாக அங்கிருந்து வந்துள்ள வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். இப் பகுதியில் கட்டாக்காலியாகத் திரிந்து இறந்த நாய்கள் இங்குள்ள கிணறுகளில் போடப்பட்டதாகவும் இதனால் அக்கிணறுகளில் இருந்து சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்ற உணவுகளை சமைத்து உண்பதற்கு கூட மேற்படி துர்நாற்றம் பெரும் இடைஞ்சலாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார் மேலும் கொடிய விஷப்பாம்புகளின் பெருக்கமும் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாகவும் வீடுகள் அனைத்தும் திறந்த நிலையில் காணப்படுவதோடு அவற்றில் இருந்து பொருள்கள் அனைத்தும் சூறையாடப்பட்டு, நீண்ட காலமாக கைவிடப்பட்டு பாழடைந்தவை போல காட்சியளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (22)

## இரு போராளிகள் வீரச்சாவு

வவுனியா மாமடுவு தொடர் காவலரண்கள்மீதுநேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த 2 ஆம் லெப். தங்கத்துரை [தியாகராசா மேகரஞ்சன், முசல்குத்தி, செட்டிகுளம் வவுனியா] 2 ஆம் லெப். நாகராசா [சுப்பிரமணியம் கணேஸ், கணேசபுரம் வவுனியா] ஆகிய இருபோராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



2 ஆம் லெப். தங்கத்துரை



2 ஆ்ம் லெப் நாகராசா

## வேவு விமானம் நோட்டம்

சிறிலங்கா விமானப்படையின் வேவு விமானம் நேற்றுக் காலை யாழ். குடாநாட்டின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மூன்று வேங்கைகள் மணலாற்றில் வீரச்சாவு

மணலாறு மாவட்டத்தில் மண்கிண்டி இராணுவ முகாமுக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற் கொண்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவடைந்தனர்

மேற்படி தாக்குதலின் போது லெப்டினன்ட் நெடுமாறன் (குமரேஸ் கிருஸ்ண பிள்ளை கிருபாகரன் புலோலி தெற்கு புலோலி, 2 - ம் லெப்டினன்ட் இறைகுமார்(நசார்) குமாரசாமி தவராசலிங்கம் மிருசுவில் வடக்கு மிருசுவில்) வீரவேங்கை இறையன் (ராம்குமார்)செல்வரட்ணம் நாகேந்திரன் பஞ்குடா வெளி,இலுப்படிச்சேனை மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர் வீரச்சாவடைந்த இம் மூன்று வேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஆவரங்காலில் குண்டு வீச்சு பலர் காயம்; கடைகள் நாசம்

## பல லட்சம் பெறுமதியான சொத்து அழிவு

(வடமராட்சி)

ஆவரங்கால் பகுதியில் நேற்று பகல் 11.15 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமானநான்கு குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலுக்கு பலர் காயமடைந்தனர். மூன்று கடைக் கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

ஆவரங்கால் சந்திப் பகுதியில் இந்த விமானங்கள் ஏழு குண்டுகளை வீசியுள்ளன.

அதிக உயரத்தில் பறந்து வந்த நான்கு பொம்மர்கள் மாறிமாறி வீசிய குண்டுகளுக்கு ஆவரங்கால் பகுதி சில மணி நேரம் அதிர்ந்தது.

முதலில் அச்சுவேலி வீதியில் உள்ள கடைத் தொடர் கட்டடங்களுக்கு வீசிய இரண்டு குண்டுகளுக்கு இரண்டு வாகனங்கள் திருத்தும் கராஜும், கடைக் கட்டடம் ஒன்றும் நிர்மூலமானது கராஜ் கட்டடங்களில் திருத்த வேலைகளுக்காக விடப்பட்டிருந்த பல இலட்சம் பெறுமதியான வாகனங்கள் அழிந்தன. கடைத் தகரங்கள் கூரைகள் வீதிகளிலும் தோட்ட வெளிகளிலும் தூக்கி வீசப்பட்டன. பிரதான வீதியில் உள்ள மரம் ஒன்று முறிந்துள்ளது.

மற்றைய ஐந்து குண்டுகளும் முன் உள்ள தோட்டத்தில் விழுந்து வெடித்தன. இச்சம்பவததில் பத்தமேனியைச் சேர்ந்த கணேசபிள்ளை - தரிசினி [வயது 18] என்ற பெண் ஒளிவிடத்தைத்தேடி ஓடும் போது காயமடைததார் மேலும் பலர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி வைத்தியசாலைக்கு மேலாக பல தடவைகள் பொம்மர்கள் வட்டமிட்டதனால் நோயாளர்கள், ஊழியர்கள் பதற்றமடைந்தனர். இச்சம்பவத்தின் போது வீதியால் சென்ற பயணிகள், வீதியில் நின்றோர் பலரும் தமது துவிச்சக்கரவண்டிகளை வீதி ஓரங்களில் நிறுத்திவிட்டு ஒளிவிடங்களைத் தேடி ஓடி மறைந்து கொண்டனர். வீதியால் சென்ற கால்நடைகள் கூட குண்டுச் சத்தத்தை தாங்க முடியாமல் கால்போன போக்கில் ஓடின.

குண்டு வீச்சுத் சம்பவத்திற்கு முன்னரும், பின்னரும் உலங்குவானூர்தி ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது. [82]

# தனி ராணுவம் தேவையென்றால் முதலில் அஷ்ரப் இணையட்டும்

## முஸ்லிம் இளைஞர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு தனி இராணுவம் தேவையென்பதை அஷ்ரப் உண்மையிலேயே விரும்புபவராய் இருந்தால் முதலில் அவரும் அவரது ஆதரவாளர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்வார்களா? என முஸ்லிம் இளைஞர்சங்கம் சவால் விட்டுள்ளது. ''கறுப்பு வெள்ளி'' குறித்து விடுத்த அறிக்கையிலேயே இவ் அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் அழைப்பு விடப்பட்டிருந்த கறுப்புதினம் கலவரதினமாக நடந்த சம்பவமூலம் முஸ்லிம் சமூகத்தின் பிளவு மேலும் வலுப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

மருதானை மகூதியில்நேற்று முன்கினம் கடுமையான கலவரத்தில் ஈடுபட்ட இரு முஸ்லிம் கோஷ்டிகளில் ஒரு கோஷ்டியினர் அஷ்ரப்பிற்கு ஆதரவானவர்கள் எனவும் மறு

[06 ஆம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் இளைஞர்கள் படையில் சேருங்கள்

### சபாநாயகர் வேண்டுகோள்

[கொழும்பு]

முஸ்லிம் இளைஞர்கள் தமது எல்லைப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு ஆயுதப் படைகளில் சேர்ந்து கொள்ளுதல் போன்ற செயல்களின் மூலம் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க வேண்டும் என்று சபாநாயகர் எம். எச். முகமத் கேட்டுள்ளார்.

கொழும்பு நகரமண்டபத்தில் நேற்று சிறிலங்கா மக்கள் காங்கிரசின் அங்குரார்ப்பண நிகழ்ச்சியின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு

[06 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு

HY - LINE PkIMA BHIRA

கைலைன்வெள்ளை, கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை' மானிப்பாய். (3503)

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின் சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப் பாணம். (சி-5250)

### தேவை

சாராய வெற்றுப்போத்தல் (750 மில்லி) பெட்டி தேவை வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் விலை பேசித் தீர்க்கப்படும். பொது முகாமையாளர்,வடம ராட்சிக் கொத்தணி, திக்கம் வடிசாலை, திக்கம், (3402)

### புலமைப்பரிசில் மீட்டற் பயிற்சி

வெளிவந்துவிட்டது ! விற் பனையாகிறது! புலமைப் பரி சில் ஆண்டு 6 அனுமதிப் பரீட் சையில் திறமையாகச் சித்தி பெற புதிய கல்வி நிலையத் தால் புதிதாக வெளியிடப் பட்ட துரித மீட்டற் பயிற் சியை (15 பயிற்சிகள்-விடைக ளுடன்) புதிய கல்வி நிலையத் திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.(3518)

### மரக்கன்றுகள்

பயனுள்ள மரக்கன்றுகள் அன்பளிப்பு. பால்மா வெற் றுப் பக்கற் 25 அல்லது மில்க் வைற் சவர்க்கார மேலுறை தந்து ஒரு மரக்கன்றைப் பெறுங்கள். — மில்க்வைற் (சி - 5272)

### ''சுவடுகள்''

மீரா வெளியீடு இயல்வா ணன் எழுதியஇந்த நாவலில்... ''மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடி யல் பிறக்கிறது! சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப் பூ மலர் கிறது.'' (3502)

## ஓராண்டு நினைவலைகள்



| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 09 | 25 |
| — | — |
| 04 | 10 |
| — | — |
| 1975 | 1991 |

### வீரவேங்கை சித்தாந்தன்

[சிறிஸ்கந்தராசா சிறிதரன்]

நினைவுக் கோவிலில் நித்தும் எரியும்
நிர்மல ஜோதியே சிறி...
நீ, மறைந்க ஓராண்டு ஆகிடினும்
நிரந்தரமாய் வீற்றிருக்கின்றாய்
நித்தம் எம் மனதில்!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

3/3, திருவையாறு, கிளிநொச்சி, (சி-5267) பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.

## நினைவு கூருகின்றோம்...

## 1992-10-25

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஓமந்தை - கொக்குவெளிப்பகுதியில். சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**கப்டன் லோறன்ஸ்** (மருதலிங்கம் சிவலிங்கம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**லெப். சபா** (கந்தையாசிவமூர்த்தி -கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**2 .ம் லெப். ஜீவன்** (தம்பையா இரத்தினசாமி - முள்ளியான், வெற்றிலைக்கேணி- யாழ்ப்பாணம்)

**2. ம் லெப். லலித்** (நடேசு ராசேந்திரன் - செங்குந்தாவீதி, முள்ளியவளை - முல்லைத்தீவு)

1987 ஆம் ஆண்டு கரவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கமல்** (செல்லக்குட்டி இளங்கோ - குமுழமுனை - மணலாறு)

கேரதீவில், இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2 -தமிழர்கள்,சாவகச்சேரி பொதுச்சந்தை மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித்தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்

கொக்குவில் இந்துக்கல்லூரி இடம் பெயர்ந்தோர் முகாம்மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட கவச வாகனத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட ஏழாலை வாசிகளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், 2 பெண் பிள்ளைகள், 2 - ஆண்பிள்ளைகள், பெறாமகன் உட்பட 6- தமிழர்கள் இதே தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும், 36 - தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வவுனியாவில் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பணிமனையில் தங்கியிருந்த போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மருத்துவர், பொது சுகாதாரப் பரிசோதகர் ஆகிய 2 - தமிழர்கள்,

யாழ் - மருத்துவ மனைவீதியில் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சங்கானையைச் சேர்ந்த தனியார் கல்வி நிலைய விஞ்ஞான ஆசிரியர்.

மல்லாகத்தில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த வர்த்தக சங்கத் தலைவர்.

1989 ஆம் ஆண்டு அம்பாறையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நிந்தவூரைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்.

1990 ஆம் ஆண்டு பலாலி முகாமைச்சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**திலீப்** (அப்புக்குட்டி வரதன் - ஊரெழு வடக்கு-யாழ்)

**வெற்றி** (சோமசுந்தரம் சுதாகரன் - சுழிபுரம் மேற்கு, யாழ்)

**சேரன்** (பெருமாள் நாகேந்திரம் - 44/1, இன்பம் வீதி- யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில், சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மகான்** (இராசதுரை சுதாகரன் - மகான்வீதி, பூதர் மடத்தடி, கோப்பாய் வடக்கு-யாழ்)

மட்டக்களப்பு - பெரியகுளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991 ஆம் ஆண்டு மண்முனை சோலைப்பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப்.ராம்கி** (இ.மோகனராஜ் பிள்ளையாரடி- மட்டு)

**தவநாதன்** (க. மகேந்திரன் - கொத்தியாபுலை- மட்டக்களப்பு)

நித்தியகுளம் பகுதியில் விழுப்புண் அடைந்து, சிகிச்சையின் போது வைத்தியமனையில் வீரச்சாவெய்திய-

**சித்தாந்தன்** (சிறிஸ்கந்தராசா சிறிதரன் - 3/3, திருவையாறு-கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5287)



தர்மம் தழைத் தோங்க
நரகாசுரனை வதம் செய்த
தீபாவளித் திருநாளில்
எங்கும் மங்களம் தங்க
எங்கள் நல்வாழ்த்துக்கள்



தர்மம் தழைத் தோங்க
நரகாசுரனை வதம் செய்த
தீபாவளித் திருநாளில்
எங்கும் மங்களம் தங்க
எங்கள் நல்வாழ்த்துக்கள்



# தரம் வாய்ந்த அரிசி வகைகளுக்கு

தவறாமல் நாடுங்கள்

# ஆர். பீ. என். அரிசி ஆலை

**பிரதான வீதி, [redacted] சாவகச்சேரி.**

(சி - 5286)

வாடிக்கையாள பெரு மக்களுக்கு
எமது உளங் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

ரேஸ்ரியின் புதிய தயாரிப்புக்களான



★ YUM YUM
★ NUT CHOCOLATES
★ ROLO
(Chocolate & Coated Toffees)

நாளை முதல் சுவைப்பதற்கு வருகிறது.

TASTE LINE INDUSTRIES (PVT) Ltd,
NO. 14 SEENIER LANE,
JAFFNA. (சி/5293)


## வெள்ளைப்பிரம்பு அன்பளிப்பு

உலக வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பகுதியிலுள்ள விழிப்புலனிழந்தோருக்கு சாவகச்சேரி லயன்ஸ் சழகம் வெள்ளைப்பிரம்புகளையும், துணிப் பார்சல்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியில் நடைபெற்ற வெள்ளைப் பிரம்பு தின வைபவத்தில் வைத்து கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. கே. கோபாலகிருஸ்ணன், தென்மராட்சி உதவி அரச அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் இவற்றை விழிப்புலனற்றோருக்கு வழங்கினார்கள் அத்துடன் வைத்தியகலாநிதி பே. பிலிப்ஸ் அவர்கள் பணமுடிப்புகளையும் வழங்கினார். (35)

## தேநீர் வழங்கும் சேவை

பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் பயணிகளுக்கு உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தேநீர் வழங்கும் சேவையை செய்து வருகிறது.

கப்பலில் வரும் நோயாளிகள், இராணுவப் பிடியிலிருந்து வருவோர் மற்றும் பலருக்கும் இச்சேவை நல்ல பயனையளித்து வருகிறது. இச்சேவைக்கு கப்பலில்வருவோர் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (82)


எம் உயிரினும் மேலான வேங்கைகளுக்கும்
அன்புக்கினிய வாடிக்கையாளர்களுக்கும்
புதிய ஆதரவாளர்களுக்கும்

எமதுஅன்பான தீபாவளி வாழ்த்துக்களை
இதய பூர்வமாக தெரிவிக்கின்றோம்.

ஜெயா
அழகுசாதன மாளிகை
ஜெயா பன்சி கவுஸ்
177 A, மின்சாரநிலைய வீதி-
160, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
(சி-5252)

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

யாழ்நகரில் பிரசித்தமான
புடைவை மாளிகை

பரீஸ் ரெக்ஸ்
153, பஸ்நிலையம், மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-5253)

எங்கள் அன்புக்கினிய வாடிக்கையாளர்களுக்கு
எமது உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

❋ நம்பிக்கை ❋ நாணயம் ❋ தரம்
நிறைந்த

விக்கினேஸ்வரன் நகை மாளிகை
பிரதானவீதி — சாவகச்சேரி
(சி-5234)


எங்கள் அன்புக்கினிய நெஞ்சங்களுக்கு
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

யாழ் நகரில் பிரபல
பத்திரிகை விற்பனையாளர்கள்

மக்மிலன் புத்தகசாலை
பஸ் நிலையம் - யாழ்ப்பாணம்


நல்லூரில்....
ஸ்ரீ காந்த் புத்தகசாலை
நல்லூர்
(சி-5254)

எமது அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொள்ளவும்
★ பவுண் ★ பொன் ★ வெள்ளி
வாங்கவும் விற்கவும்
இன்றே நாடுங்கள்



விஜயா ஜுவல்லறி
நகைத் தொழிற்சாலை
(சி-5235) கண்டி றோட், சாவகச்சேரி.

தீபாவளி நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்



அழகிய கண்கவர் தங்க நகைகளை
நவீன டிசைன்களில்
குறித்த தவணையில் செய்து கொடுப்பவர்கள்

சபாரத்தினம் பத்தர்
தங்க நகை மாளிகை
(சி-5285) பிரதான வீதி, சாவகச்சேரி.


## முதலாண்டு நினைவஞ்சலி



தமிழ்த் தாய்
மடியில்
25 - 10 - 1991

### 2-ம் லெப்டினன்ட் ராம்கி

கணேசமூர்த்தி மோகன்ராஜ்
பிள்ளையாரடி மட்டுநகர்.

''தலைவனின் பாதையில் இவனொரு புலிவீரன்
தமிழீழ மண்ணின் தன்மானப் புலிவீரன்
மீன் பாடும் தேனாட்டை நேசித்த வீரன் - பகை
நடுங்கிய போரிலே மடிந்தவன் ராம்கி.''

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்:-
அப்பா, அம்மா, அண்ணா, தம்பிமார்,
தங்கை, அம்மம்மா, சின்னம்மா,
தகவல்: சித்தப்பா குடும்பத்தினர், மாமாமார், மாமிமார்.
ஆனைக்கோட்டை. [சி\5160]

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் 1992 - 11 - 26 ஆம் தேதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

உயிரிரசாயனவியலில் விரிவுரையாளர் (மருத்துவம்) / உதவிவிரிவுரையாளர் (தகுதிகாண்) மருத்துவம் சாராத/தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) தற்காலிக உதவி விரிவுரையாளர் (மருத்துவம் சாராத)

குறிப்பு: உயிரிரசாயனவியல் - உயிர்த்தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

விரிவுரையாளர் (மருத்துவம்) ரூபா 4500 - 10 X 200 - 6,500/- (மாதமொன்றுக்கு)
(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் அதாவது 4500-ரூபாவிலும் இரண்டுபடி அதிகமான சம்பளத்தில், 4900/-ரூபாவில் வைக்கப்படுவர்.

உதவிவிரிவுரையாளர் (தகுதிகாண்) (மருத்துவம் சாராத): ரூபா 3 900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்கு. ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்தது ரூபா 4500 - 10x200- 6,500- மாதமொன்றுக்கு சம்பள அளவுத்திட்டத்தில் துறைத்தலைவரினதும் பீடத்தலைவரினதும் சிபார்சின் அடிப்படையில 4 500 - ரூபா சம்பளப் படியைத் துணைவேந்தர் குறித்தொதுக்குவார்.

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்; ரூபா 4 900-) நிலையானது) மாதமொன்றுக்கு
தற்காலிக உதவிவிரிவுரையாளர் (மருத்துவம் சாராத) ரூபா 3 900 - (நிலையானது) மாதமொன்றுக்கு

**தகைமைகள்:**

விரிவுரையாளர் (மருத்துவம்) : (1) எம் பி பி.எஸ் பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு. அல்லது
(2) எம்.பி பி எஸ் இறுதித் தேர்வில் சித்தியுடன் உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமை- அல்லது
(3) அங்கீகரிக்கப்பட்ட அனுபவத்துடன் எம். பி பி. எஸ் இறுதித் தேர்வில் சித்தி (இப்பகுதியின் கீழ் பரிசீலனை செய்யப்படும் ஆளெவரையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முன்அனுமதியுடன் பேரவையின் சிபாரிசுடன் நியமிக்க முடியும்)

உதவி விரிவுரையாளர்: (தகுதிகாண்)1 உரியபாடத்தில் சிறப்புப்பட்டமொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு; அல்லது மருத்துவ சாராத
2. உரிய பாடத்தில் சிறப்புப் பட்டமொன்றில் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவு; அல்லது
3. உரிய பாடத்தில் சிறப்புப் பட்டத்தில் சித்தியுடன் உரிய பாடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டம்,
4 உரிய உயர் கல்வி நிறுவனத்தின் சிபார்சின் அடிப்படையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் வேறு அத்தகைய தகைமைகள்.

குறிப்புகள்: (அ) (3) இதன் கீழ் தகுதிபெற்ற விண்ணப்பதாரியொருவர் (1) அல்லது (2) இதன்கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரி எவரும் இல்லாவிட்டால் மட்டுமே நியமனத்திற்காகப் பரீசீலனை செய்யப்படுவார்
(ஆ) (2) இதன் கீழ் தகுதி பெற்ற விண்ணப்பதாரியொருவர் 1) இதன் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரி எவரும் இல்லாவிட்டால் மட்டுமே நியமனத்திற்காகப் பரீசீலனை செய்யப்படுவார்.
(இ) தேவையான பட்டப்பின் தகைமைகளையும், அனுபவத்தையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளை ஏற்றவாறு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 இற்கு நியமிப்பதற்கு கவனித்துப் பார்க்கப்படும்.

பின்வரும் மாற்றுத் தகைமைகளும் பரிசீலனை செய்யப்படும்.
1. எம் பி.பி எஸ் பட்டம் அல்லது அதற்குச் சமமான உயர் தகைமைகள்.
2. பி டி எஸ் அல்லது பி.வி எஸ்.சி அல்லது பி எஸ் சி (உயிரிரசாயனவியல்) அல்லது முதலாம் இரண்டாம் வகுப்பு ஆனஸ்சுடன் பி எஸ் சி. இரசாயனவியல் பட்டம்.
3. உயிரிரசாயனவியல் - அணுகதிரணம உயிரியல் உயிர்த்தொழில்நுட்பத்தில எம் எஸ்.சி பட்டத்துடன் பி.எஸ்.சி- (சிறப்பு- பொது பட்டம்

விண்ணப்பம் இப்பல்கலைக்கழக ஸ்தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற 23 X 10 ச.மீற்றர் அளவுடைய கடித உறை இணைத்தனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி5288)
1992-10-17


## ஊவாவில் சம்பளப்பணம் கொள்ளை

ஊவா பரணகம வித்தியாலைய சம்பளப்பணம் 1,60,000 ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது பேற்றடி பாடசாலை ஆசிரியருக்கு விநியோகிப்பதற்காக அதிபர் டி எச் சுகபண்டார காசோலையை வங்கிக்கு மாற்றச்சென்ற சமயம் இனம் தெரியாத குழுவினர் அதிபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து பணத்தை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

அதிபருடன் சென்ற இருவரும் ஓடிவிட்டதாகவும் அதிபர் படுகாயம் அடைந்த நிலையில் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் இது தொடர்பாக ஊவா பரனகம பொலிசாரும் பதுளை பொலிசாரும் இணைந்து விசாரணை செய்து வருவதாகவும் பணத்தில் ரூபா 29,000 கைப்பற்றப்பட்டதாகவும் தெரிய வருகின்றது

## ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருந்து

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் சுமார் 10,000 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன இப்பிரதேச சபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ச. முருகேச பிள்ளை மேற்கொண்டுள்ளார் (25)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு சுமார் 6682 ரூபா 50 சதம் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு தமது கற்கை நெறியை பூர்த்தியாக்கும் கலைப்பீட மாணவர்கள் (87/88 கல்வியாண்டு) தமது முயற்சியால் சேகரித்த மேற்படி பணத்தை இவ் இல்லத்தின் பாவனைக்கென அழுக்க விளக்குகளைக் கொள்வனவு செய்வதற்கென வழங்கியுள்ளனர்.

## கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களின சமாசங்களினதும், சம்மேளனத்தினதும் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை 26ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற உள்ளது. இக் கலந்துரையாடலில் முக்கிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட இருப்பதால் சகல சமாசங்களினதும், சம்மேளனத்தினதும் நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர். (25)


## நான்காவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி
### அபிராமி சோமேஸ்வரன்

இராமநாதன்வீதி. இருபாலையில் வசிக்கும். சோமேஸ்வரன் - கலைச்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி அபிராமி நான்காவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று 25-10-92 கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, பெரியஅன்ரா. திருச்செல்வி. பெரியமாமா முத்துலிங்கம் [ஜேர்மனி], சின்னமாமா மகேசன் [ஜேர்மனி], பெரியமாமி, பாட்டி, ஐயாமார், அம்மம்மாமார், அன்ராமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், தம்பிமார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அம்பாள் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (சி-5265)

## தீபாவளி வாழ்த்துக்கள்

வருடம் ஒரு நாள்
வரும் இந்த திருநாள்
வாழ்வில் நூறுமுறை காண
வாழ்த்துகிறோம்

**M. F. றைக்ரர் என்ஜினியர்ஸ்**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

[சி-5302]

யாழ்ப்பாணக்கல்லூரிதொழில்நுட்பநிறுவன
**மாணவர் மன்றத்தினர் நடாத்தும்**
சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும்

## 'புகைப்படக் கண்காட்சி'

இடம்: நிறுவன வளாகம், வட்டுக்கோட்டை
காலம்: 29, 30, 31.10.92 திகதிகளில் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை.

அன்பளிப்பு: ரூபா 10/-
ரூபா 5.00 [மாணவர்களுக்கு]

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

ஒரு மரம், அது வீழ்ந்தகற்கு ஏற்பவே கிடக்கும் என்பது மட்டுமல்ல, சாய்ந்ததற்கு ஏற்பவேவிழும்-
— ஜோஸப் ஜான் கர்னி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 25-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# அமைச்சர் மாற்றத்தால் ஆகப்போவதில்லை

வடக்கு கிழக்கில் போரில் ஏற்படும் பின்னடைவுகளுக்குப் பொறுப்பேற்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் டி. பி. விஜயதுங்கா பதவி விலகவேண்டும் என்ற தொனியில் 'ஐலண்ட்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் விமர்சனம் செய்துள்ளது "பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் டி. பி. விஜயதுங்கா தனது வயதின் காரணமாகவோ அல்லது வேலைப்பளுவின் காரணமாகவோ தனது கடமையைச் செவ்வனே செய்ய முடியாதவராக இருந்தால் அவரது இடத்திற்கு வேறொருவரை நியமிப்பது பற்றி ஆலோசனை நடத்தக் கூடாதா" எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஓர் அமைச்சரின் பொறுப்பில் உள்ள விடயத்தில் ஒரு தவறு, அல்லது பின்னடைவு ஏற்படும் போது அதற்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலகுவதும் அல்லது அரசாங்கமோ அன்றி எதிர்க்கட்சிகளோ அன்றி 'தேசத்தின் நலன்' விரும்பும் பத்திரிகைகளோ அமைச்சரைப் பதவி விலகக் கோருவதும், அமைச்சர் பதவி விலகுவதும் ஓர் 'ஜனநாயக நாட்டில்' நடைபெறக்கூடிய; நடைபெற்ற ஒன்றே. ஆனால், சிறிலங்கா 'ஜனநாயகத்தில்' அவை இன்று தொலைந்து போன அம்சங்களாகும்.

இதேவேளை 'ஐலண்ட்' பத்திரிகை தற்பொழுது விடுத்துள்ள கோரிக்கைகளும் அவற்றிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களும் இலங்கையில் நடைபெறும் போருக்கு அதாவது 'ஐலண்ட்' விரும்புவது போல், ஓர் முற்றுப் புள்ளியை ஏற்படுத்துமா? அவ்வாறு ஏற்படுத்த முடியுமா என்பதும் சர்ச்சைக்குரியதே.

இலங்கையில் தமிழரின் தேசிய இனப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறி ஒரு தசாப்தத்தையும் கடந்து இரண்டாம் தசாப்தத்தின் அரைப் பகுதியை எட்டிவிட்டது. ஆனால் போராட்டம் நிற்பதற்கான சாத்தியப்பாடுகளோ, அமைதி ஏற்படுவதற்கான சூழ்நிலையோ தென்படுவதாக இல்லை.

# கைகளை தூக்கியவாறு நின்ற போது சரமாரியாக வேட்டுகள் தீர்ந்தன

## கிளாலி சம்பவம் பற்றி படகோட்டி தகவல்

(யாழ்ப்பாணம்)

மின்னல் வேகத்தில் எனது படகை நோக்கி விரைந்து வந்த கடற்படைப் பீரங்கிப் படலகக் கண்டதும் எனது இரண்டு கைகளையும் நான் மேலே உயர்த்தியவாறு நின்ற போது என்னை நோக்கி சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன,

இவ்வாறு நேற்று முன் தினம் மாலை 5 30 மணியளவில் புலோப்பளைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நவரத்தினம் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் பற்றி அவர் விபரிக்கையில்; மேலும் கூறியதாவது; சம்பவதினம் வழமைபோல் நான் எனது படகில் பொருள்களை ஏற்றி வருவதற்காக ஆலங்கேணி பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தேன். கிளாலி பகுதியிலிருந்து புறப்பட்ட நான் புலோப்பளைப் பகுதியை அண்மித்துக் கொண்டிருந்தபோது திடீரென ஆனையிறவுபகுதியிலிருந்து கடற்படைப் பீரங்கிப் படகொன்று எனது வள்ளத்தை நோக்கி விரைவாக வந்தது. அதனைக் கண்டநான் வள்ளத்தை ஓட்டுவதைக் கைவிட்டு இரண்டு கைகளையும் மேலே உயர்த்தியவாறு நின்றேன். அப்போ எனது படகை மிக நெருங்கி வந்த கடற்படையினர் என்னை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதனால் எனது விலாஎலும்பு பகுதியில் சூடுபட்டதும் நான் சுருண்டு வீழ்ந்தேன்.

சில நிமிடங்களுக்குள் எனது படகிற்குள் பாய்ந்த கடற்படையினர் ஏதோ சிங்களத்தில் பேசியவாறு என்னைக் காலிலும் கையிலும் பிடித்து தூக்கி கடலில் எறிந்தனர். நான் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த போது பின்னால் வந்த படகோட்டிகள் என்னைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்தனர்.

பின்னர்தான் எனது படகும் மற்றொரு படகும் சிறிலங்கா கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டதாக அறிந்தேன்.

மற்றைய படகில் சென்ற இரு ஓட்டிகளுக்கும் என்ன நடந்ததென்பது தெரியவில்லை. (ச)

# இலங்கை திரும்பும் அகதிகளுக்கு தென்பகுதியில் அகதி முகாம்கள்

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் தமிழ் அகதிகளைக் குடி அமர்த்துவதற்கு தென் பகுதியிலும் முகாமகள் அமைக்கப்படவுள்ளன. புனரமைப்பு புனர்வாழ்வுசமுகநல அமைச்சு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இந்த முகாம்களை அமைக்கும் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிசராலயம விதிக்கும் தரத்திற்கமைவாக திருக்கோணமலை, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் அகதி முகாம் கொத்தணிகள் அமைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் திலக் சந்திரசேகரா தெரிவித்தார்.

கொத்தணி அமைப்பில் அகதி முகாம்கள் முதலில் வன்னியிலும், திருக்கோணமலையிலும் அமைக்கப்படவுள்ளன. வன்னிக் கொத்தணியில் சுமார் 3000 பேரும், திருக்கோணமலைக் கொத்தணியில் 1,000 அகதிகளும் குடியமர்த்தப் படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மகனை விடுதலை செய்யுமாறு தாய் ஆட்கொணர்வு மனு

காரணம் தெரிவிக்கப்படாமல் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் பயங்கரவாத தடுப்புச் சட்டம் அல்லது அவசரகால விதிகளின் கீழ் களுத்துறை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் 400 க்கும் அதிகமான தமிழ்க்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களை விடுதலைசெய்யக்கோரி தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களில் திருப்பழுகாமம் பெரிய போரதீவைச் சேர்ந்த தங்கராசா மகேஸ்வரராஜா விவகாரம் சற்றுவித்தியாசமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரின் தாய் சட்டத்தரணி விநாயகமூர்த்தி ஊடாகத் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது;

எனது மகன் சம்பவதினம் 26-3-92 வேலைக்குப் போய்க் கொண்டிருந்தபோது பெரிய போரதீவு இராணுவ முகாம் அதிகாரி ஒருவர், கேட்டதன் பேரில் சிகரெட் வாங்கிக் கொடுத்த மகன், வேலையால வரும்போது கைது செய்யப்பட்டார். அவர் கொடுத்த சிகரெட் வெடித்தது என்றே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

அவர் இப்போது அவசர கால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# அவசரகால[illegible] அமலாக்கத்தால்

குஜராத் பல்கலை. கல்வி பயிலும்

# போதனாசிரியருக்கு எதிராக குற்றச்சாட்டுக் கடிதம்

## யாழ்ப்பாணத்திலிருந்து சென்றது

[யாழ்ப்பாணம்]

குஜராத் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டுத் தனது துறைசார்ந்த கற்கை நெறியில் பட்ட மேற்படிப்பைத் தொடரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் போதனாசிரியருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய கடிதம் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைக்குரிய இந்தக் கடிதத்தை எழுதியவர் அந்தப் போதனாசிரியர் கடமையாற்றும் பிரிவுத் தலைவர் என்று சொல்லப்படுகிறது. கடிதம் எவர் மூலம் முறைப்படி அனுப்பப்பட வேண்டுமோ, அவர் மூலமாக அனுப்பப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இக்கடிதம் குறிப்பிட்ட போதனாசியருக்கெதிரான பிரிவுத் தலைவரின் எதிர்ப்பான போக்கின் அறிகுறி என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. இதே போதனாசிரியர் ஏலவே பெனாரிஸ் பல்கலைக் கழகத்தில் (காசி) மேற்படிப்பிற்காக அனுமதிக்கப்பட்ட போது, அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய கடிதம் ஒன்றை சம்பந்தப்பட்டவர் அனுப்பியதால் போதனாசிரியர்படிப்பைக்கைவிட்டுநாடு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கும் சபையொன்றின் தலைவருக்கு போதனாசிரியர் வேண்டியவர் என்றும் மேற்படிப்பைத் தொடர போதனாசிரியருக்குப் போதிய தகைமையில்லை என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது இக்கடிதம் தொடர்பாக குஜராத் பல்கலைக்கழகம் கொழும்பிலுள்ள சபையின் தலைவருக்கு கவன ஈர்ப்புக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அக்கடிதத்துக்குப் பதிலெழுதிய மேற்படி சபையின் தலைவர், தனது கல்வி கேள்வி, வகித்தபொறுப்பான பதவிகள், தற்போது வகித்து வரும் முக்கிய பதவி பற்றிக் குறிப்பிட்டிருப்பதோடு சம்பந்தப்பட்ட போதனாசிரியர் தனது கற்கை நெறியைத் தொடர அனைத்துத் தகுதியும் பெற்றவர் எனவும் தெரியப்படுத்தி உள்ளார். பதில் கடிதத்தின் பிரதி யாழ். பல்கலைக் கழக நிர்வாகத்துக்குக் கிடைத்துள்ளதாகவும் நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன.

# விசாரணையில் தாமதமே சிறை நிரம்பக் காரணமாம்

பொலிஸ்விசாரணைதாமதப்படுவதாலேயே சிறைக் கூடங்களிலும்விளக்கமறியலிலும்அதிக எண்ணிக்கையான சந்தேகநபர்களை வைத்திருக்க வேண்டியுள்ளது.. இதனால் சிறைச்சாலைகளும், விளக்க மறியல் கூடங்களும் இடநெருக்கடியை எதிர் நோக்குகின்றன.

விசாரணை மேற்கொள்ளும் பொலிஸ் உயர்அதிகாரி அடிக்கடி இடம் மாறுவதால் இந்நிலைஏற்படுகிறதாம் தற்பொழுது ஏழாயிரத்திற்கு அதிகமானவர்கள் இவ்விதம் இருப்பதாக சிறைசாலை அதிகாரி ஒருவர் ''லங்கா தீப'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இவர்களில் 95 வீதமானவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கான தாமதங்களில் இதுவும் ஒன்றென அவர் தெரிவித்தார்.

வருடம் ஒன்றுக்கு சுமார் 25 லட்சம் ரூபா இவ்வாறு சந்தேகத்தில் அடைத்து வைத்திருப்பவர்களுக்கு செலவிட வேண்டி இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கணித, விஞ்ஞான, ஆசிரியர்

# போட்டிப்பரீட்சை வெட்டுப்புள்ளி வந்தது

கணித விஞ்ஞான ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தியோர்களுக்கு கொழும்பு பரீட்சைத் திணைக்களம்தனித்தனி பிரதிகளில் வெட்டுப் புள்ளிகளை தபால்மூலம் அனுப்பி வருகின்றது.

இதில் அகில இலங்கை ரீதியில் எத்தனையாவது இடத்தில் சித்தியடைந்துள்ளீர்கள் எனவும் குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கணித விஞ்ஞான ஆசிரியராக வடபகுதியில் 14 பேர் நியமிக்கப்பட்டது தெரிந்ததே. [07]

கோருவதும், அமைச்சர் பதவி விலகுவதும் ஓர் 'ஜனநாயக நாட்டில்' நடைபெறக்கூடிய; நடைபெற்ற ஒன்றே. ஆனால், சிறிலங்கா 'ஜனநாயகத்தில்' அவை இன்று தொலைந்து போன அம்சங்களாகும்.

இதேவேளை 'ஐலண்ட்' பத்திரிகை தற்பொழுது விடுத்துள்ள கோரிக்கைகளும் அவற்றிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களும் இலங்கையில் நடைபெறும் போருக்கு அதாவது 'ஐலண்ட்' விரும்புவது போல், ஓர் முற்றுப் புள்ளியை ஏற்படுத்துமா? அவ்வாறு ஏற்படுத்த முடியுமா என்பதும் சர்ச்சைக்குரியதே.

இலங்கையில் தமிழரின் தேசிய இனப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறி ஒரு தசாப்தத்தையும் கடந்து இரண்டாம் தசாப்தத்தின் அரைப் பகுதியை எட்டிவிட்டது. ஆனால் போராட்டம் நிற்பதற்கான சாத்தியப்பாடுகளோ, அமைதி ஏற்படுவதற்கான சூழ்நிலையோ தென்படுவதாக இல்லை.

ஆனால், சுமார் ஒன்றரை தசாப்த காலத்திற்குள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே ஆட்சியில் இருப்பினும் பாதுகாப்பிற்குப் பொறுப்பாகப் பல அமைச்சர்கள் இருந்துள்ளார்கள். இந்த வரிசையில் வேரப்பிட்டியா, லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜயரெட்ணா, டி. பி. விஜயதுங்கா ஆகியோர் அடங்குவர்.

இதில் ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்ற பின்னர் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழக பட்டதாரியும், அரசியலில் ஓரளவு இளையவர் எனக் குறிப்பிடத்தக்கவரும் முன்னாள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சரவையில் திறமைசாலி எனப் பாராட்டப்பட்டவருமான லலித் அத்துலத் முதலியாகும். ஆனால் அவரின் நான்கு வருட முயற்சி இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போருக்கு முடிவுகட்டிவிடவில்லை.

அடுத்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்ணாவோ லலித்திலிருந்தும் சற்று வேறுபட்டவர். கடும் போக்கும், சுறுசுறுப்பும் மிக்கவரெனப்பெயர் எடுத்தவர் தீவிரமாக இராணுவத் தீர்வை நாடிநின்றவரும் ஆகும். அத்தோடு இராணுவத்தினரின் முழு நடவடிக்கைகளுக்கும் தானே பொறுப்பேற்று இராணுவத்தினரின் பெரும் விசுவாசத்திற்குரியவராகவும் இருந்தவராவார். இவர் இராணுவத்தைப் பெருக்கியும், கூட ஆயுதப் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவர முடியவில்லை.

இதுமட்டுமல்ல; இலங்கை விவகாரத்தில் தலையிட்டு, இந்திய இராணுவத்தை அனுப்பிய இந்திய பாதுகாப்பு அமைச்சினாலேயே இப்போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவர முடியவில்லை.

இந்நிலையில் அமைச்சர்களை மாற்றுவதோ, அன்றி இராணுவத் தளபதிகள், அதிகாரிகளை மாற்றுவதோ இப்பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதைச் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும் ஏனெனில் இப்பிரச்சினையின் தீர்வு அமைச்சர்களிலோ அன்றி இராணுவத் தளபதிகளிலோ அல்ல, தமிழரின் தேசிய உணர்விலேயே தங்கியுள்ளது. இதனைச் சிங்களப் பேரினவாதம் புரிந்து கொள்ள வேண்டும்.

# மகனை விடுதலை செய்யுமாறு தாய் ஆட்கொணர்வு மனு

காரணம் தெரிவிக்கப்படாமல் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் பயங்கரவாத தடுப்புச் சட்டம் அல்லது அவசர கால விதிகளின் கீழ் களுத்துறை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் 400க்கும் அதிகமான தமிழ்க்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களை விடுதலைசெய்யக்கோரி தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களில் திருப்பழுகாமம் பெரிய போரதீவைச் சேர்ந்த தங்கராசா மகேஸ்வரராஜா விவகாரம் சற்றுவித்தியாசமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரின் தாய் சட்டத்தரணி விநாயகமூர்த்தி ஊடாகத் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது;

எனது மகன் சம்பவதினம் 26-3-92 வேலைக்குப் போய்க் கொண்டிருந்தபோது பெரிய போரதீவு இராணுவ முகாம் அதிகாரி ஒருவர் கேட்டதன் பேரில் சிகரெட் வாங்கிக் கொடுத்த மகன், வேலையால வரும்போது கைது செய்யப்பட்டார். அவர் கொடுத்த சிகரெட் வெடித்தது என்றே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

அவர் இப்போது அவசர கால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# அவசரகாலசட்ட அமுலாக்கத்தால் தொழிற்சங்க உரிமைகள் பாதிப்பு

**-ச.சு. தொழிற்சங்கங்களின் கூட்டுசம்மேளனம் கவலை**

(புரசில்ஸ்)

சிறிலங்கா ஜனாதிபதி அவசரகால நிலைமைகளின் கீழ் தனக்குள்ள அதிகாரங்களைப் பாவித்து அவசரகாலச் சட்டங்களை அமுலாக்குவதன் மூலம் தொழிற்சங்க உரிமைகளைக் கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தியுள்ளார். குறிப்பாகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையே மறுக்கப்பட்டுள்ளது என்று சர்வதேசச்சுதந்திர தொழிற்சங்கங்களின் கூட்டுச் சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

பெல்ஜியத்தின் தலைநகரான புரசில்ஸ்சில் தலைமைச் செயலகத்தைக் கொண்டிருக்கும் சர்வதேசச்சுதந்திர தொழிற்சங்களின் கூட்டுச்சம்மேளனமே உரிமைகள் மீறல் ஆய்வு - 1992 என்ற தனது அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளது. இந்த ஆய்வறிக்கை இல. தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உற்பத்தித் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள் அவசரகாலப்பிரமாணங்களின் படி வேலையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் அரசு அத்தியாவசியசேவைகள் என்ற வரையறைக்குள் வங்கிகள், அரச நிறுவனங்கள் தகவல் தந்தித்தொடர்பு உள்ளூராட்சி அமைப்புகள், பெருந்தோட்டங்கள் ஆகியவற்றையும் அடக்கியுள்ளது. ஏற்றுமதிப்பொருள்கள் எரிபொருள் - மின்சாரம் ஆகியனவும் இதனுள் அடக்கும் இப்படிச் செய்வதன் மூலம் அரசு பெரும்பான்மையான தொழிலாளரின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைமறுத்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அந்த அறிக்கையில் —

ஜாஎல சிம்கா ஆடைத் தொழிற்சாலை ஊழியர் 236 பேர் 1990 நவம்பரில் அமைக்கப்பட்ட தமது தொழிற்சங்கத்தை அங்கீகரிக்கும்படி இவ்வருடம் பெப்ரவரியில் வேலை நிறுத்தம்செய்தனர். நிர்வாகம் இவர்களுக்கு வேலை வழங்க மறுத்தது அரசு வற்புறுத்தியும் கூட அத்தியாவசிய சேவைகள் பிரமாணத்தின் கீழ் இந்த 236 பேரையும் மீளவும் வேலைக்கமர்த்த நிர்வாகம் மறுத்து வருகிறது என்றும்,

இவ்வகையில் சுதந்திரவர்த்தகவலயத்தில் தொழில்பார்க்கும் 50,000 தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கஉரிமை மறுக்கப்பட்டிருக்கிறது இந்த லட்சணத்தில் சிறிலங்கா முழுவதையும் சுதந்திர வர்த்தக வலயமாக்க அரசு தீர்மானித்துள்ளது. இதனால் சிறிலங்காவில் உள்ள அனைவருக்குமே தொழிற்சங்க உரிமை மறுக்கப்படும்நிலை ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# ஒருமாதத்தில் ஒருகோடி ரூபா போதைப்பொருள் பிடிபட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இயங்கும் போதைப் பொருள் தடுப்பு பணியகம் இம்மாதத்தில் மட்டும் சுமார் ஒருகோடிரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளைக் கண்டு பிடித்துக் கைப்பற்றியுள்ளது. இந்த வாரத்தில் மட்டும் மூன்று கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும், ஒரு வாரத்தில் ஆகக் கூடுதலான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் முறை என்றும் கூறப்படுகிறது

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு பயணியிடமிருந்து 1860 கிராம்ஹெரோயின் போதைப் பொருளும், முஸ்லிம் பெண்மணி ஒருவரிடமிருந்து பிளாஸ்டிக் பையொன்றினுள் வைக்கப்பட்ட 250 கிராம் போதைப் பொருளும், மற்றுமொரு தமிழ்ப் பெண்ணிடமிருந்து ஒரு கிலோ போதைப்பொருளும் கடந்த சில தினங்களில் மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

பதினேழரை லட்சம் ரூபா புடைவைவகைகளை முந்தல், உடப்பு பொலிசார் ஒன்றிணைந்து கைப்பற்றினர். இவர்கள் இப்பொருட்களை லொறி ஒன்றில் ஏற்றும் போது கைப்பற்றினார்கள்.

இதில் சுமார் 53 பார்சல்கள் இருந்தது. இது நாட்டுக்கு கள்ளமாக கடத்தி வரப்பட்டதாகவும், லொறி உட்பட பொருட்கள் அனைத்தும் அரசினால் சுவீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் மீது விசாரணை நடைபெறுவதாகவும் தெரிய வருகின்றது.

சாலைகளும், விளக்கமறியல் கூடங்களும் இடநெருக்கடியை எதிர் நோக்குகின்றன.

விசாரணை மேற்கொள்ளும் பொலிஸ் உயர்அதிகாரி அடிக்கடி இடம் மாறுவதால் இந் நிலைஏற்படுகிறதாம் தற்பொழுது ஏழாயிரத்திற்கு அதிகமானவர்கள் இவ்விதம் இருப்பதற்கான தாமதங்களில் இதுவும் ஒன்றென அவர் தெரிவித்தார்.

வருடம் ஒன்றுக்கு சுமார் 25 லட்சம் ரூபா இவ்வாறு சந்தேகத்தில் அடைத்து வைத்திருப்பவர்களுக்கு செலவிட வேண்டி இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கணித, விஞ்ஞான, ஆசிரியர்

# போட்டிப்பரீட்சை வெட்டுப்புள்ளி வந்தது

கணித விஞ்ஞான ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தியோர்களுக்கு கொழும்பு பரீட்சைத் திணைக்களம்தனித் தனி பிரதிகளில் வெட்டுப் புள்ளிகளை தபால்மூலம் அனுப்பி வருகின்றது.

இதில் அகில இலங்கை ரீதியில் எத்தனையாவது இடத்தில் சித்தியடைந்துள்ளீர்கள் எனவும் குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கணித விஞ்ஞான ஆசிரியராக வடபகுதியில் 14 பேர் நியமிக்கப்பட்டது தெரிந்ததே. [07]

# வவுனி. நுழைவோர் மீது ராணுவம் தீவிர விசாரணை

[வவுனியா]

வவுனியா நகருக்குள் நுழையும் பிரயாணிகள் அனைவரும் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்த விசாரணை மேற்கொள்ளப்படுவதற்கு நீண்ட நேரம் பிடிப்பதால் பயணிகளின் போக்குவரத்து கணிசமான அளவு குறைந்து காணப்படுகிறது.

வவுனியா நகருக்குள் நுழையும் பயணிகள் ஒவ்வொருவரும் அதற்குரிய அனுமதி அட்டையை பெறவேண்டும் என்பது தெரிந்ததே

இராணுவ உளவாளிகளினால் விசாரணைக் குட்படுத்தப்பட்ட பின்பே பயணிகளுக்கு 'பாஸ்' வழங்கப்படுகிறது.

இவ்வாறு 'பாஸ்' வழங்குவதில் நீண்ட நேரம் எடுப்பதால் வவுனியா நகருக்குள் சென்று மீள திரும்பிவருதற்கு பல மணித்தியாலங்கள் செல்கின்றது.

இதன் சிரமத்தை உணர்ந்து மக்கள் பயணத்தை தவிர்த்து வருகின்றனர். [தி]

# கிராமசேவையாளரை தேடி மக்கள் அலைச்சல்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த சில கிராம சேவையாளர்களைத் தேடி பொதுமக்கள் அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; அண்மைக்கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பு மற்றும் அச்சம் காரணமாக வலிகாமம் தென்மேற்கு பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து தற்போது பல பகுதிகளிலும் தங்கியிருப்பது தெரிந்ததே. அப்பொழுது அப்பகுதிகளைச் சேர்ந்த கிராமசேவையாளர்களும் இடம்பெயர்ந்தனர்.

தற்போது இக்கிராமசேவையாளர்களுக்கு பிரதேச செயலகத்தினால் புதிய அலுவலகங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அலுவலகங்களில் அவர்களைப் பொதுமக்கள் சந்திக்கும் நேர அட்டவணையும் தொங்கவிடப்பட்டுள்ளது.

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு பொதுமக்கள் சென்றால் அங்கு குறிப்பிட்ட கிராம சேவையாளர்களைக் காணமுடிவதில்லை என பல பொதுமக்கள் புகாரிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொதுமகன் ஒருவர் தெரிவிக்கையில் தான் பலநாட்கள் நிவாரண அட்டை பெறுவதற்காகதமது பகுதி கிராம சேவையாளரைத் தேடி தூர இடத்திலிருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் வந்து பல மணிநேரம்காத்திருந்தும் சந்திக்க முடியாதிருப்பதாக கவலைதெரிவித்தார்.

## கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு பிரதேசத்தைச்சேர்ந்த சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் சகல தர அங்கத்தவர்களுக்குமானகலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் கந்தரோடை கந்தையா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

ஈழநாதம்



நாசர்கோவிலில் நேற்று முன்தினம் தமிழீழக் காவல்துறைப் பணிமனை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டபோது, தமிழீழக் காவல்துறையின் கொடியினை காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றுவதையும், அதைப் பார்த்த வண்ணம் கடற் படைத் தளபதி கங்கைஅமரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.


தீபத் திருநாள்
வாழ்வில் ஒளியேற்ற
வாடிக்கையாளர் அனைவருக்கும்

**தீபாவளி வாழ்த்துக்கள்**

கலக்சி புகைப்பட சேவை
1-ம் மாடி 3̇87, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (5300)


**தீபாவளி வாழ்த்துக்கள்**

## திட்டமிட்டபடி மீள்பரீட்சை நாளை நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

க.பொ.த உயர்தரத்திற்கான பௌதிகவியல் மீள்பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று இரவு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளது. எனவே திட்டமிட்டபடி மேற்படி பரீட்சை நாளை நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இ.சிவானந்தன், பி. வீரபத்திரன், புலேந்திரன், மகேசவேலு, செல்வவிநாயகம், சிவகுருநாதன், செல்வராசா ஆகிய கல்வித் திணைக்கள அதிகாரிகளை இன்று காலை பத்து மணிக்கு புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்குச் சமுகம் தரும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். [௧]

### பயணிகள்

வத்தால் குறிப்பிட்ட இருவரிடமும் கொடுத்து விடப்பட்டுள்ளது. அதிசக்திவாய்ந்த வெடிமருந்தும், பிறபொருள்களும் கோதுமை மாவினுள்ளும், பிஸ்கட் பொதியினுள்ளும் மறைத்து வைக்கப்பட்டு 21-10-1992 அன்று வடபகுதிக்குள் அனுப்பப்பட்டுள்ளது.

பெருஞ்சேதம் விளைவிக்கக்கூடிய இந்த வெடிபொருள்களை எம்மிடம் கையளித்து எதிரியின் திட்டத்தை அம்பலப்படுத்திய தமிழீழமக்களைப் பாராட்டுவதுடன் இது போன்ற திட்டங்களிலிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், வியாபார நோக்குடன் வவுனியாவிற்கு சென்றுவரும் மக்களை பண ஆசைகாட்டி விலைக்கு வாங்குவதற்கு இராணுவத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எமது மக்கள் பலியாகிவிடக்கூடாது எனவும் தமிழீழ மக்களை வேண்டிக் கொள்கிறோம்.

### மணலாற்றில்

ணுவ முகாமிலிருந்தும் பலத்த எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

### தனி

கோஷ்டியினர் பிற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடகிழக்கு மாகாண முஸ்லிம்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே முஸ்லிம் கட்சி முஸ்லிம் காங்கிரஸ் எனவும் ஒரேதலைவர் அஷ்ரப் எனவும் அவர் தன்னைக் காட்டிக் கொள்வதால் எரிச்சலடைந்த கொழும்பு முஸ்லிம் தலைவர்கள் இக்கலவரத்தின் பின்னணியில் செயல்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

இதன் ஒரு அம்சமாகவே கொழும்பு முஸ்லிம் இளைஞர் சங்கம் அஷ்ரப்பின் கொடும்பாவியை எரிக்க முயன்றார்கள் என்றும் அஷ்ரப்பை தாக்க முயன்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அமைப்பு அஷ்ரப்பை கடுமையாக சாடியுள்ளது. அஷ்ரப் தனது இயலாமையை மறைக்கவும் அவருக்கு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கின்மையை மறைக்கவுமே கறுப்பு தினத்தை அறிவித்தார் என அவ் அமைப்பு தெரிவித்தது.

### முஸ்லிம்

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் நோக்கமாகும். ஏனைய இனங்களுடன் சமாதானமாக வாழ்வதற்கு ஏதுவாக பொது எதிரியான புலிகள் இயக்கத்தினரை நிராயுதபாணிகளாக்குவதற்கு முஸ்லிம் இளைஞர்களும் மற்றும் அகதி முகாம்களில் உள்ளவர்களும் ஆயுதப்படையில் சேர்ந்து கொள்ளவேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

### அகதிகள்

என்பதை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் இவ்வாறான உணவுப் பொருள்களை விநியோகிப்பதை தவிர்ப்பதற்கு யாழ் செயலக அதிகாரிகள் சில முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்ட உணவுப்பொருள்கள்பழுதடைந்து போனவை என்று கருதும் பட்சத்தில் அவற்றை மீண்டும் யாழ். செயலக உணவுக் களஞ்சியத்தில் ஒப்படைத்துவிட்டு அதற்குப் பதிலாக பழுதடையாத பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகள் அறிவித்திருப்பதாக தெரியவருகிறது.

### பரிசோதிக்க ஏற்பாடு

இவ்வாறு பழுதடைந்தது எனக்கருதப்படும் உலர் உணவுப் பொருள்களைப் பரிசோதிப்பதற்காக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்இதற்காகஉணவுப்பரிசோதகர் ஒருவர், மருத்துவ அதிகாரி ஒருவர் மற்றும் செயலக அதி


**தீபாவளி வாழ்த்துக்கள்**

தீபத்திருநாளில் சிறப்புகள் பெருகட்டும்

கண்ணைக் கவர்ந்திடும்

வண்ணமிகும் ஆடைகளுக்கு


## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப்டினன்ட் ஜீவன் (குதிரைவீரன்)

[தம்பிஐயா இரத்தினசாமி]

மண்ணில் 25.11.1958 — விடிவில் 25.10.1985

வெற்றியூராம் வெற்றிலைக்கேணி மண்ணில்
செங்களம் ஆடியே சிங்களம் சிதைத்திட
வங்கமதில் வந்துதித்த அன்னையவள் வழியினிலே
தமிழ் அன்னையவள் பெற்றெடுத்த வீரத்திலகம்
ஜீவனே
தமிழ்ப்பட்டமதை மேற்கொள்ளப்படிப்புதனை மேற்
கொண்டவேளை

பொட்டறை போலத்தமிழன் வாழ்வுதனில் சிங்களன்
கட்டியம் கூறியே தமிழன் கைகளில் விலங்கு போட
என் நெஞ்சமெலாம் நோகுதே என் தமிழா-
நான் வெஞ்சமர் ஆடியே வீழ்த்திடுவேன் சிங்களனை
என உன் உயிரைச்துச்சமதாய் நீ மதித்து

நஞ்சுண்ட கண்டனை நாமமதாய் கொண்டவர் நாம்
இங்குண்டு எம் தமிழீழம் எமக்குண்டு ஒரு தலைவன்
என அவன் போட்டபாதையிலே தோள் கொண்டாய்
நஞ்சதனை

வேங்கையின் வழியினிலே வீரநடை போட்ட உன்னை
குதிரை வீரன் என்று சொல்வாருமுண்டு ஜீவன் என்று
சொல்வாருமுண்டு
நெட்ட நெடுமரமும் நீண்ட மதிற் சுவரும் ஜீவனே
உன் வீரமதைச் சொல்லுமே வன்னியின் வீரமண்ணுமே.

எமை நாட்டடிமை ஆக்கவந்த சிங்களன்
உனைச்சிறைச்சாலை ஆக்கினரோ நாம் காணா
உன் முடிவொன்று ஏதுவோ நாம் அறியோம் ஜீவனே
ஆனாலும் விடிவொன்று மலருமென்று தமிழீழம்
காத்திருப்போம்

அன்றைய சமரில் உன்னோடு உயிர்நீத்த லோறன்ஸ் சபா,லலித் ஆகியோருக்கும் எம் கண்ணீர்ப்பூக்கள். மாவீரர் பிரிவால் துயரும் ஜீவன்கள்.

வெற்றிலைக்கேணி,
நாகர்கோவில். [3501] - ஜீவன்குடும்பத்தினர்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

## கலக்சி புகைப்பட சேவை

1-ம் மாடி 387, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (5300)



## தீபாவளி வாழ்த்துக்கள்

மங்களம் பொங்க
வாழ்த்துகின்றோம்

## வைரமாளிகை

79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்

(சி-5301)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | வீரச்சாவு |
|---|---|
| 1973 | 1991 |
| — | — |
| 5 | 10 |
| — | — |
| 9 | 7 |



## வீரவேங்கை வின்சன்

(பஞ்சலிங்கம் சிறிரஞ்சன்)

திதி ‍25-1ט-1992

உறவுகளைப் பிரிந்து — பாச
உணர்வுகளுக்கு வரம்பு கட்டி
உண்மை உலகம் வேண்டும் என்பதற்காக
உன்னையே அர்ப்பணித்தாய்.

இவரது இல்லத்தில் இன்று [25-10-92] நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் உற்றார், உறவினர், சகபோராளி களையும் அன்புடன் அழைக்கின்றோம்

வின்சன் வீதி,
உரும்பராய் கிழக்கு.

அன்பு அண்ணர், தம்பி, அப்பா,
அம்மா, உற்றார், உறவினர்.

[3521]

கொண்டு வருகின்றனர்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்ட உணவுப்பொருள்கள்பழுதடைந்து போனவை என்று கருதும் பட்சத்தில் அவற்றை மீண்டும் யாழ். செயலக உணவுக் களஞ்சியத்தில் ஒப்படைத்துவிட்டு அதற்குப் பதிலாக பழுதடையாத பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகள் அறிவித்திருப்பதாக தெரியவருகிறது.

### பரிசோதிக்க ஏற்பாடு

இவ்வாறு பழுதடைந்தது எனக்கருதப்படும் உலர் உணவுப் பொருள்களைப் பரிசோதிப்பதற்காக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்இதற்காகஉணவுப்பரிசோதகர் ஒருவர், மருத்துவ அதிகாரி ஒருவர் மற்றும் செயலக அதிகாரி ஒருவர் ஆகியோரை உள்ளடக்கிய மூவர்கொண்ட குழு மேற்படி உணவுப் பொருள்களைப் பரிசோதனைசெய்து மனித பாவனைக்கு உகந்தது அல்ல என்று பிரகடனப்படுத்தும் பட்சத்தில் இவ்விடயம் தொடர்பான முழு விபரங்களும் அடங்கிய அறிக்கை கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பகுதியினருக்கு அனுப்பி வைக்கப்படும் இதுவே வழமையான நடைமுறையாகும் என்றும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர். [க]

### வேவு

பல பகுதிகளையும் நோட்ட மிட்டுச் சென்றுள்ளது.

இதற்கிடையில் உலங்கு வானூர்தி ஒன்றும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் நோட்டமிட்டு கல்முனைப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளில் இறங்கி ஏறிச் சென்றதை அவதானிக்கமுடிந்தது.

மேலும் அவ்ரோ விமானங்களும் அடிக்கடி பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கி ஏறிச் சென்ற வண்ணம் இருந்தன. (பா)

### புல்மோட்டை

கடந்த வியாழக்கிழமை திருமலை மாவட்டம் புல்மோட்டை பகுதியில் சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக முன்னர் செய்தி வெளியிடப்பட்டது தெரிந்ததே.

தற்போது மேற்படி சண்டையில் சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மணலாற்றில்

ணுவ முகாமிலிருந்தும் பலத்த எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச் சாவு அடைந்தனர்.

ஏதுவாக பொது எதிரியான புலிகள் இயக்கத்தினரை நிராயுதபாணிகளாக்குவதற்கு முஸ்லிம் இளைஞர்களும் மற்றும் அகதி முகாம்களில் உள்ளவர்களும் ஆயுதப் படையில் சேர்ந்து கொள்ளவேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.


## தீபாவளி வாழ்த்துக்கள்

தீபத்திருநாளில் சிறப்புகள் பெருகட்டும்

கண்ணைக் கவர்ந்திடும்
வண்ணமிகும் ஆடைகளுக்கு

## சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/5303]



பொங்கும் மங்களம்
எங்குமே தங்கட்டும்

## தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்

## கரன் வர்த்தக ஸ்தாபனம்

772, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

[சி-5304]


## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 24-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 6282

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்

42-488, 27-5863, 24-7225, 22-7406, 24-4992, 28-2504, 24-7360, 22-2250, 41-8823, 24-5167, 26-6893, 24 5122, 26-1204, 29-2056, 28-2956, 22-8855, 24-3364, 24-8391 25-7001, 36-2993, 36-9010, 36-3440.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்

24-6511, 26-8839, 26-4885, 27-6024, 26-2941, 24-5912, 24-2655, 26-6075, 28-3528, 26-4393, 41-7693, 43-1019, 26-8365, 42-3329, 24-6480, 24-9938, 27-5681.


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.


வேங்கையின் வழியினிலே வீரநடை போட்ட உன்னை
குதிரை வீரன் என்று சொல்வாருமுண்டு ஜீவன் என்று
சொல்வாருமுண்டு
நெட்ட நெடுமரமும் நீண்ட மதிற் சுவரும் ஜீவனே
உன் வீரமதைச் சொல்லுமே வன்னியின் வீரமண்ணுமே.

எமை நாட்டடிமை ஆக்கவந்த சிங்களன்
உனைச்சிறைச்சாலை ஆக்கினரோ நாம் காணா
உன் முடிவொன்று ஏதுவோ நாம் அறியோம் ஜீவனே
ஆனாலும் விடிவொன்று மலருமென்று தமிழீழம்
காத்திருப்போம்


அன்றைய சமரில் உன்னோடு உயிர்நீத்த லோறன்ஸ் சபா,லலித் ஆகியோருக்கும் எம் கண்ணீர்ப்பூக்கள். மாவீரர் பிரிவால் துயரும் ஜீவன்கள்.

வெற்றிலைக்கேணி,
நாகர்கோவில் [3501]

- ஜீவன்குடும்பத்தினர்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 25 | 25 |
| — | — |
| 11 | 1ט |
| — | — |
| 1958 | 1985 |



## 2-ம் லெப். ஜீவன்

[தம்பிஐயா இரத்தினசாமி]

தூரம் ஒருவர் துணிந்து புலியாகின்ற
ஆரம்ப காலம் ஓங்குபுகழ் ஹாட்லியின்
ஆற்றல்மிகு கல்வி ஆர்வத்துடன் புலியானான்
ஏற்றபல யுத்த எழிற்பயிற்சி கொண்டவனாய்

எண்பத்து மூன்றில் இணைந்தான் புலியணியில்
பண்பட்ட குடும்பத்தின் பாசமகன் கடைக்குட்டி
இரத்தினசாமிப் புதல்வன் எடுப்பான் தமிழ்மறவன்
இரக்கசிந்தை நண்பர்க்கு இனிக்கின் அன்புநெஞ்சன்

கொக்கிளாய் புக்கெதிரி கூட்டம்பல நூறாக
உக்கிரமாய்த் தாக்கி உயர்த்திட்டான் புலிக்கொடியை
வன்னிக் காட்டில் வரிப்புலிகள் அணிக்கெல்லாம்
மின்னலடி கொமாண்டோ மிளிர்பயிற்சி வழங்கியவன்

ஓமந்தைக் காட்டில் உடல்கூடக் கிடைக்காமல்
நாமுன்னை இழக்க நடந்தபழி மறப்போமோ?
உனது இலட்சியப் பாதையில் வந்திட்ட
வீரவேங்கை பாலச்சந்தரும் உன்னுடன் சேர்ந்திட்டான்

ஆம்! என்றைக்கென்றாலும் மாமன் இலட்சியத்தை பூமியிலே நாட்டி அவன் புலிக்கொடியே ஆளவைப்போம்.

★ இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களையும் இன்று நினைவு கூருகின்றோம்.

முள்ளியான்,
வெற்றிலைக்கேணி.
(3514)

(மருமக்கள்)
ஜீவன் (பாவலன்)
இதயன்